[2010 ஜனவரி 11

(எ) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010), மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. ஞானசேகரன், என்ன சொல்லுங்கள்?*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உரிமைச் சங்கங்கள் என்று பல பேர் பல சங்கங்களைப் பதிவு செய்து பல போலியான நிகழ்வுகளையெல்லாம் நாட்டிலே செய்துகொண்டிருக்கிறார்கள். சொல்லப்போனால், மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகம் என்று சொல்லி, கட்டப் பஞ்சாயத்தில் அதிகமாக அவர்கள்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் இந்தச் சட்டத்தின்வழியாகக் கட்டுப்படுத்த "மனித உரிமைகள்" என்ற வார்த்தைகள் மட்டும் சங்கப் பெயரில் அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றுதான் இப்போது சட்டத்தை நீங்கள் இயற்றுகிறீர்கள். ஆனால், ஏற்கெனவே மனித உரிமைகள் பாதுகாப்புச் சங்கம் என்று வைத்துக்கொண்டு, பல ஊழல்களை, பல சமுக விரோதச் செயல்களை செய்துகொண்டிருப்பவர்களை, காவல் துறை எப்படிக் கண்டிக்கப்போகிறது, எப்படி அவர்களைக் கட்டுப்படுத்தப்போகிறது என்கிற நெறிமுறைகள் இதில் இல்லை. ஆகவே, இதற்கான நெறிமுறைகளை அரசு உடனடியாக வகுக்க வேண்டும். இப்போது "மனித உரிமைகள்" என்று பெயரில் உள்ள*

@ 8-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

வார்த்தைகளை மட்டும் எடுத்துவிட்டால் போதாது. மனித உரிமைகள் சங்கம் என்று வைத்துக்கொண்டு, ஏய்த்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறவர்களை அடக்குவதற்கு இந்த அரசு ஒரு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கங்கள் பதிவு செய்கிற நேரத்தில் "மனித உரிமைகள்" என்ற அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற கருத்து ஏற்புடையது அல்ல. காரணம், எங்கு பார்த்தாலும் மனித உரிமை மீறல்கள் தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவை பொது இடங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பொது மக்கள் கூடுகிற இடங்களில் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு சிலர் மனித உரிமைப் பாதுகாப்பு அமைப்புகள் என்று வைத்துக்கொண்டு தவறு செய்கின்றார்கள் என்கிற காரணத்திற்காக, அப்படிப்பட்ட பெயரில் சங்கங்களே பதிவு செய்யக்கூடாது என்பது ஏற்புடையது அல்ல. உண்மையைக் கண்டறிய வேண்டும். தேவையானவற்றில் விலக்களிக்க வேண்டும். என்ன தேவையோ அதை ஏற்படுத்த வேண்டுமே தவிர, அதை விடுத்து "மனித உரிமைகள்" அமைப்பு என்ற பெயரே கூடாது என்று சொல்வது ஏற்புடையதல்ல. ஆகவே, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இருக்கிற குறைகளைக் களையவேண்டுமே தவிர, வேறு நடவடிக்கை கூடாது என்பதைக் கூறி, சட்டமுன்வடிவை நான் ஆட்சேபித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அண்மையிலே ஈரோடு, தருமபுரி போன்ற மாவட்டங்களிலே ஆதி திராவிட மாவட்டக் குழு கமிட்டி உறுப்பினர்கள், காவல் துறையினரால் அடித்து உதைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட மனித உரிமைகள் பறிக்கப்படாமல் பாதுகாக்கப்படக்கூடிய வகையிலே

சட்டத்திலே வகை செய்யப்பெற வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 ஜனவரி 11]

பிற்பகல் 1-50

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010), மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2010)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[@] 9-1-2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.